**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.89/2019**

| | | |
|---|---|---|
| **NAME** | : | சொக்கலிங்கம் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 13.04.2023.**

குறுக்கு விசாரணை

நான் ஸ்டேட் பாங்க், ஆக்சிஸ் பாங்க், பெடரல் வங்கி இவற்றில் கணக்கு வைத்துள்ளேன். அனைத்தும் நடப்பு கணக்குகள். யாருக்காவது பணம் கொடுக்க வேண்டும் என்றால் காசோலை மூலமாகத்தான் கொடுக்க வேண்டும் என்ற விவரம் தெரியும். காசோலை புத்தகம் என்னிடம் உள்ளது. பான் கார்டு உள்ளது. 2017-2018 வருடத்திற்கான வருமான வரி செலுத்தியுள்ளேன். எவ்வளவு செலுத்தியுள்ளேன் என்று ஞாபகம் இல்லை. வருமான வரி செலுத்தியதற்கான ஆவணம் வைத்துள்ளேனா என்றால் 2020ல் இருந்து வைத்துள்ளேன். கடந்த ஆண்டு வருமான வரி செலுத்தியுள்ளேன். எவ்வளவு என ஞாபகம் இல்லை. பிரதிவாதிக்கு நான் எவ்வளவு பணம் கொடுத்துள்ளேன் என்றால் ரூ.25லட்சம், ஐந்தைந்து லட்சமாக ரொக்கமாக கொடுத்துள்ளேன். முதன் முதலில் 11.04.2018ல் முதலில் கொடுத்தேன். 5லட்சம் கேட்டார், 5லட்சம் கொடுத்தேன். அந்த நேரத்தில் மரம் வாங்குவதற்காக கேட்டார். அதற்காக பாண்டு எழுதிக் கொடுத்தார். பாண்டு எழுதியவர் தனியாக வந்தார். கையெழுத்து அவர் போட்டார். அவர் கைப்பட எழுதவில்லை. பிரிண்டட் பார்மில் எழுதிக் கொடுத்தார். பாண்டு எழுதியவர் பிரிண்டட் பார்ம் எடுத்து வந்தார். பாண்டு எழுதிய நபரை அவரே அழைத்து வந்தார். பாண்டு எழுதியவர் தியாகராஜன். அவர் எங்கிருந்து வந்தார் என்று எனக்கு தெரியாது. தியாகராஜனை பாண்டு எழுதியதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. தாவா பாண்டை எழுதும்போது அவர் உடன் வந்தார். பாண்டு எங்கள் வீட்டில் வைத்து எழுதினார்கள். பணம் கொடுக்கும்போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் நான், தியாகராஜன், ஜெய்சங்கர், பூபதி, ஆர்.விஜயன் ஆகியோர் இருந்தார்கள். எங்கள் குடும்பத்தினர் அங்கு இல்லை. விஜயன், பூபதி ஆகியோர் குடியாத்தத்தை சார்ந்தவர்கள். அவர்கள் எனக்கு தெரிந்தவர்கள்தான். ஜெய்சங்கர்தான் அவர்களை அழைத்து வந்தார். நான் ஜெய்சங்கரிடம் வரும்போது 2 சாட்சிகளை அழைத்து வாருங்கள் என சொன்னேனா என்றால் ஆமாம். இந்த பாண்டில் வியாபாரத்திற்காக கடன் வாங்கியதாக காணப்படுகிறதா என்றால் இல்லை. மற்ற 6 பாண்டுகளிலுமே வியாபாரத்திற்காக கடன் வாங்கியதாக எழுதப்படவில்லை. இந்த பாண்டுகளுக்கு முன்னால் பலமுறை கடன் வாங்கியுள்ளார். அவர் சிலநேரம் 10 நாளைக்கு ஒருதடவை கேட்பார். சிலநேரம் மாதம் ஒருமுறை கேட்பார். அவர் தேவைக்கு ஏற்ப பணம் கேட்பார். அதிகபட்சமான தொகை ரூ.5லட்சம் கொடுத்துள்ளேன். எவ்வளவு தொகை வாங்கி கடன் திரும்ப கொடுத்துள்ளார் என்பது சம்பந்தமாக கணக்கு வைக்கவில்லை. 5 பாண்டும் ஒரே நேரத்தில் எழுதப்பட்டதா

என்றால் இல்லை. தனித்தனியாக தனித்தனி தேதிகளில் எழுதப்பட்டது. அனைத்து பாண்டுகளும் ஒரே நபரால்தான் எழுதப்பட்டது. வா.த.சா.ஆ.1 முதல் 5 பாண்டுகளிலும் சாட்சிகள் மாறுபடும். 2வது பாண்டு முன்னிலைக்கு 19.04.2018ல் கொடுத்தேன். அப்போது தியாகராஜன், ஜெய்சங்கர், முருகன், விஜயன் ஆகியோர் இருந்தார்கள். முருகனும், விஜயனும் குடியாத்தத்தை சேர்ந்தவர்கள். எனக்கு தெரிந்த நபர்கள்தான். பணத்தை வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். தியாகராஜன் என்ன தொழில் செய்கிறார் என எனக்கு தெரியாது. 5கடன் கொடுக்கும்போதும் ஜெய்சங்கர்தான் அவரை அழைத்து வந்தார். எழுதியவர் கையொப்பம் போட்டுள்ளார். கையெழுத்து போடும்போது என்ன தொழில் செய்கிறார் என அதில் குறிப்பிடவில்லை. பாண்டு எழுதியவர் ஒரு ஆவண எழுத்தர். தியாகராஜனை முதல் பாண்டு எழுதும்போதுதான் நேரில் பார்த்தேன். அதற்கு முன்பு எனக்கு எந்த ஆவணமும் அவர் எழுதவில்லை. அவர் பத்திரம் எழுதுபவர் என்று ஜெய்சங்கர் சொல்லித்தான் எனக்கு தெரியும். வா.த.சா.ஆ.1 ஆவணம் மூலம் பணம் கொடுக்கும்போது காலை சுமார் 11மணி. வா.த.சா.ஆ.2 ஆவணம் மூலம் பணம் கொடுக்கும்போது சுமார் அதே நேரம் தான். வா.த.சா.ஆ.3 ஆவணம் மூலம் பணம் கொடுக்கும்போது காலை சுமார் 10மணி முதல் 12மணி இருக்கும். நான் அவர் கையில் சரியாக 11மணிக்கு பணம் கொடுத்தேன். இரண்டாவது கடன் கொடுக்கும்போது 11–12மணி இருக்கும். எல்லா கடனும் ஏறக்குறைய அதே நேரம்தான் கொடுத்தேன். ஜெய்சங்கர் ஏறுபொழுதில்தான் அவர் பணம் வாங்க வருவார். நான் பணம் கொடுப்பதற்கு நேரம் காலம் பார்ப்பது கிடையாது. 3வது கடன் கொடுக்கும்போது ஜெய்சங்கர், முருகன், கோபி, தியாகராஜன் ஆகியோர் இருந்தார்கள். 4வது கடன் கொடுக்கும்போது ஜெய்சங்கர், தியாகராஜன், எஸ்.என்.கோபி, பூபதி ஆகியோர் இருந்தார்கள். நான் பணம் கொடுக்கும்போதெல்லாம் சாட்சிகளை கூப்பிட்டு வாருங்கள் என சொல்வேன். 5வது பாண்டுக்காக 05.05.2018ல் பணம் கொடுத்தேன். பாண்டு எழுதிக்கொடுத்துவிட்டு பணம் வாங்கப்பட்டது. பணம் முதலில் கொடுத்தேன். பணத்தை எண்ணிப்பார்த்து வாங்கிவிட்டு அதில் உள்ள ஸ்டாம்பில் கையெழுத்து போட்டார். முதலில் பாண்டை எழுதிவிட்டார்கள். பின் பணத்தை வாங்கிவிட்டு, எண்ணிப் பார்த்துவிட்டு கீழே கையெழுத்து போட்டார்கள். சாட்சிகள் அவர் பணத்தை எண்ணிப் பார்த்து வாங்கி கையொப்பம் போட்ட பிறகு சாட்சிகள் கையொப்பம் போட்டார்கள். சாட்சிகள், பிரதிவாதி ஆகியோர் ஒரே பேனாவைப் பயன்படுத்திதான் கையொப்பம் போட்டார்கள். இங்க்பென்னில் தான் எழுதினார். பிரதிவாதி ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டார். அவர் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளார். பிரிண்டட் பாண்டு எங்கு வாங்கப்பட்டது என்று தெரியாது. நான் அந்த பாண்டை வாங்கவில்லை. எங்கு பாண்டு வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் குடியாத்தம் பைனான்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக இல்லை. ஓய்வு பெற்ற பிறகு என்னுடைய நிலங்களைப் பார்த்து வருகிறேன். பாண்டில் கண்ட தொகையைப் பெற்றுக் கொண்டதற்கான ரசீதை வாங்கவில்லை. தொகையை வீட்டில்தான் வைத்திருந்தேன். வா.த.சா.ஆ.4 பாண்டு எழுதி 3 நாட்கள் கழித்து வா.த.சா.ஆ.5 பாண்டு எழுதிக்கொடுக்கப்பட்டது. 25 நாட்களுக்குள் 5 பாண்டுகள் முன்னிலைக்கு ரூ.25 லட்சம் கொடுக்கப்பட்டது. 5 பாண்டுகளில் கண்ட சாட்சிகள் யாரையும் நான் அழைத்து வரவில்லை. (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.